V12Eco

விருதுநகர் மாவட்டம்

அரையாண்டுப் பொதுத் தேர்வு - டிசம்பர் 2024

-----

# வகுப்பு 12

நேரம் : 3.00 மணி | **பொருளியல்** | மதிப்பெண்கள்: 90

## பகுதி - I

குறிப்பு: **i) அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும்.** **20×1=20**

**ii) கொடுக்கப்பட்டுள்ள மாற்று விடைகளில் மிகவும் ஏற்புடைய விடையைத் தேர்ந்தெடுத்துக் குறியீட்டுடன் விடையினையும் சேர்த்து எழுதவும்.**

1) ஒரு பொருளாதார அமைப்பின் அடிப்படை பொருளாதார நடவடிக்கைகளை குறிப்பிடுக.
அ) உற்பத்தி மற்றும் பகிர்வும் ஆ) உற்பத்தி மற்றும் பரிமாற்றம்
இ) உற்பத்தி மற்றும் நுகர்வு ஈ) உற்பத்தி மற்றும் சந்தையிடுகை

2) திறந்து விடப்பட்ட பொருளாதாரத்தின் வட்ட ஓட்ட மாதிரி என்பது ............ ஆகும்.
அ) இருதுறை மாதிரி ஆ) மூன்று துறை மாதிரி
இ) நான்கு துறை மாதிரி ஈ) மேல் சொல்லப்பட்ட அனைத்தும்

3) ஒரு நாட்டின் ............ செயலை தேசிய வருவாய் குறிப்பிடுகிறது.
அ) தொழில் ஆ) விவசாயம் இ) பொருளாதாரம் ஈ) நுகர்வு

4) எவற்றைக் கூட்டி வருமான முறையில் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது?
அ) வருவாய் ஆ) வரி இ) செலவு ஈ) வருமானம்

5) நடப்புக்கூலி விகிதத்தில் வேலை செய்ய விரும்புகிற ஒவ்வொருவரும் பணியில் இருந்தால் அது
அ) முழு வேலைவாய்ப்பு ஆ) குறைந்தளவு வேலைவாய்ப்பு
இ) வேலைவாய்ப்பின்மை ஈ) வேலைக்கான வாய்ப்பு

6) நவீன பொருளாதார கோட்பாட்டின் வளர்ச்சியில் ............ கோட்பாடு ஒரு திருப்புமுனையாக அமைந்தது.
அ) கீன்ஸ் ஆ) சே இ) தொன்மையது ஈ) வேலைவாய்ப்பு

7) இறுதிநிலை நுகர்வு நாட்டம் கூடினால் ............
அ) நுகர்வுச் சார்புக்கோடு செங்குத்தை நோக்கிச் செல்லும்
ஆ) நுகர்வுச் சார்பு மேல்நோக்கி இடம்பெயரும்
இ) நுகர்வுச் சார்பு கீழ்நோக்கி இடம்பெயரும்
ஈ) சேமிப்புச் சார்பை மேலே தள்ளும்

8) ஏற்றுமதி இறக்குமதி வங்கி ............ துவங்கப்பட்டது.
அ) ஜூன் 1982 ஆ) ஏப்ரல் 1982 இ) மே 1952 ஈ) மார்ச் 1982

9) கூலி மற்றும் மூலப்பொருட்கள் செலவு கூடுவதால் பொருட்களின் போது விலை மட்டும் அதிகரிப்பது ............ பணவீக்கம் ஆகும்.
அ) செலவு உந்து ஆ) தேவை இழுப்பு இ) ஓடும் ஈ) தாவும்

10) வாணிக சமநிலை அறிக்கையில்
அ) பண்ட பரிமாற்றம் மட்டும் பதிவாகிறது.
ஆ) பண்டங்கள் பணிகள் பரிமாற்றங்கள் பதிவாகிறது.
இ) மூலதனம் மற்றும் நிதி பரிமாற்றங்கள் பதிவாகின்றன.
ஈ) மேற்கண்ட அனைத்தும் பதிவாகிறது.

11) சுழற்சி அயல்நாட்டு செலுத்து சமநிலை சமமற்ற நிலைக்கான காரணம்
அ) வாணிக சுழற்சியின் மாறுபட்ட காலகட்டம்
ஆ) வருமானமும் விலை தேவை நெகிழ்ச்சியும் நாடுகளுக்கு இடையே வேறுபடுதல்
இ) நீண்ட கால பொருளாதார மாற்றங்கள் ஈ) அ மற்றும் ஆ

12) பன்னாட்டு மேம்பாட்டு அமைப்பு கீழ்காணும் இதன் துணை அமைப்பாகும்.
அ) பன்னாட்டு பண நிதியம் ஆ) உலக வங்கி இ) சார்க் ஈ) ஆசியான்

13) பிரிக் என்ற சுருக்கச் சொல் சேர்க்கப்பட்ட ஆண்டு ............
அ) 2001 ஆ) 2005 இ) 2008 ஈ) 2010

14) மொத்தச் செலவு கடன் அல்லாத மொத்த வருவாயைவிட அதிகமாக இருந்தால், அது
அ) நிதி பற்றாக்குறை ஆ) வரவு செலவு திட்ட பற்றாக்குறை
இ) முதன்மைப் பற்றாக்குறை ஈ) வருவாய்ப் பற்றாக்குறை

15) தற்கால அரசு எனப்படுவது ............
அ) தலையிடா அரசு ஆ) மேல்மட்டத்தில் உள்ளவர்களின் அரசு
இ) நலம் பேணும் அரசு ஈ) காவல் அரசு

16) பின்வரும் எந்த ஒன்று உலகவெப்பமயமாதலின் எதிர்பார்க்கப்படும் விளைவு?
அ) கடல் மட்டம் உயர்தல் ஆ) மழைப்பொழிவு மாறுதல்
இ) பாலைவனம் அதிகரித்தல் ஈ) மேற்சொன்ன அனைத்தும்

17) நீண்ட கால திட்டமிடலின் அடிப்படை கருத்து நாட்டின் ............ மாற்றமாகும்.
அ) நிதி ஆ) வேளாண்மை இ) தொழில் ஈ) கட்டமைப்பு

18) வருமான வரியை விதிப்பது
அ) மத்திய அரசு ஆ) மாநில அரசு
இ) உள்ளாட்சி அமைப்பு ஈ) மேற்காணும் அனைத்தும்

19) பொருளாதார அளவையியல் என்பது எத்தனை பாடங்களின் இணைப்பு?
அ) 3 பாடங்கள் ஆ) 4 பாடங்கள் இ) 2 பாடங்கள் ஈ) 5 பாடங்கள்

20) ''பணத்தின் வாங்கும் சக்தி'' என்ற நூலை வெளியிட்டவர் ............
அ) ஃபிஷர் ஆ) பிகு இ) கீன்ஸ் ஈ) மார்ஷல்

## பகுதி - II

**குறிப்பு: ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். 7×2=14**
**வினா என் 30-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

21) வருமானத்தின் வட்ட ஓட்டம் - வரையறு.
22) PQLI என்பதன் விரிவாக்கம் மற்றும் உட்கூறுகள் யாவை?
23) ஊரக வேலையின்மையின் முக்கிய இயல்பு யாது?
24) முடுக்கி வரையறு.
25) கடன் உருவாக்கம் என்றால் என்ன?
26) வணிக செலுத்துநிலை பற்றி நீவீர் அறிவது யாது?
27) சிறப்பு எடுப்பு உரிமைகள் என்பதன் பொருளை எழுதுக.
28) பொருளாதார முன்னேற்றத்தின் குறியீடுகளை குறிப்பிடுக.
29) பொருளாதார அளவையியல் என்றால் என்ன?
30) ஒரு நாட்டின் நிதி சொத்துக் கையிருப்புக் கணக்கினை பட்டியலிடுக.

## பகுதி - III

**குறிப்பு: ஏதேனும் 7 வினாக்களுக்கு விடையளிக்கவும். 7×3=21**
**வினா என் 40-க்கு கட்டாயமாக விடையளிக்கவும்.**

31) கலப்புப் பொருளாதாரத்தின் முக்கிய இயல்புகளை எடுத்தெழுதுக.
32) காரணி செலவில் NNP குறிப்பு வரைக.
33) ADF தொகுப்பு தேவை என்றால் என்ன? அதன் கூறுகளை கூறுக.
34) பணவீக்கத்தின் வகைகள் பற்றி எழுதுக.
35) தன்னிச்சையான முதலீடு மற்றும் தூண்டப்படுகிற முதலீடு ஆகியவற்றை வேறுபடுத்துக.
36) வாணிக கொடுப்பல் நிலைக்கும் அயல்நாட்டு செலுத்து சமநிலைக்கும் இடையேயான ஏதேனும் மூன்று வேறுபாடுகளை பட்டியலிடுக.
37) நிலமாசு என்றால் என்ன? அதற்கான காரணங்களை குறிப்பிடுக.
38) பொருளாதார முன்னேற்றத்தை நிர்ணயிக்கும் பொருளாதாரம் சாராத காரணிகள் யாவை?
39) பொருளாதார அளவையியலின் நோக்கங்களைக் கூறுக.
40) குறிப்பு எழுதுக: (i) பற்று அட்டையும் (ii) கடன் அட்டையும்

## பகுதி - IV

**அனைத்து வினாக்களுக்கும் ஒரு பக்க அளவில் விடையளிக்கவும்: 7×5=35**

41) அ) முதலாளித்துவம், சமதருமம், கலப்புத்துவம் ஆகியவற்றின் தன்மையை ஒப்பிடுக. **(அல்லது)**
ஆ) ஒப்புமை செலவுக்கோட்பாட்டினை ஆய்வு செய்க.

42) அ) நாட்டு வருமானம் கணக்கீட்டில் உள்ள சிரமம் யாவை? **(அல்லது)**
ஆ) பொருளாதார முன்னேற்றத்தை தீர்மானிக்கும் பொருளாதாரம் சார்ந்த காரணிகளை விவாதிக்கவும்.

43) அ) வேலையின்மையின் வகைகள் யாவை? **(அல்லது)**
ஆ) பின்வரும் விவரங்களுக்கு கார்ல் பியர்சனின் உடந்தொடர்புக் கெழுவினைக் கண்டறிக.

| | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **தேவை X** | 23 | 27 | 28 | 29 | 30 | 31 | 33 | 35 | 36 | 39 |
| **விற்பனைY** | 18 | 22 | 23 | 24 | 25 | 26 | 28 | 29 | 30 | 32 |

44) அ) மூலதனத்தின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கும் (MEC) முதலீட்டின் இறுதிநிலை உற்பத்தித் திறனுக்கும் (MEI) உள்ள வேறுபாடுகள் யாவை? **(அல்லது)**
ஆ) அரசு செலவு அதிகரிப்புகளுக்கான காரணங்கள் யாவை?

45) அ) பொருளாதார ஆய்வில் சமூக கணக்கிடுதலின் அவசியத்தை விவரிக்க. **(அல்லது)**
ஆ) நாட்டின் பொருளாதார மேம்பாட்டில் வணிக வங்கிகளின் பங்கினை விளக்குக.

46) அ) இர்விங்ஃபிஷரின் பண அளவு கோட்பாட்டினை விளக்குக. **(அல்லது)**
ஆ) பன்னாட்டு பண நிதியத்தின் நோக்கங்களை விளக்குக.

47) அ) புதிய பன்னாட்டு வாணிக கோட்பாட்டினை விவாதிக்கவும். **(அல்லது)**
ஆ) கீன்ஸின் நுகர்வுச் சார்பின் உளவியல் விதியினை வரைபடம் மூலம் விளக்குக.

----------